# Immigration Detention Facility Conditions of Entry
# குடிவரவுத் தடுப்புக்காவல் நிலைய உள்-நுழைவு அனுமதிக்கான நிபந்தனைகள்

Australian BORDER FORCE

Form **1512B TAM** TAMIL

## உள்-நுழைவிற்கான நிபந்தனைகள்

### அடையாள ஆவணத் தேவைப்பாடுகள்

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் நுழைவதற்கு முன்பாக, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து (வயதுவந்த) வருகையாளர்களும், உங்களுடைய விண்ணப்பதில் கொடுக்கப்பட்டுள்ள வண்ணப் புகைப்பட அடையாளம் உள்ளடங்க, 100 புள்ளிகளுக்கான அடையாள ஆவணங்களைக் கட்டாயமாகக் கொடுத்தாகவேண்டும்.

- தூதரக ஆவணங்கள் (அல்லது ஒரு Immicard) உள்ளடங்க, பிறப்புச் சான்று, கடவுச்சீட்டு, குடியுரிமைச் சான்று அல்லது கடவுச்சீட்டில் உள்ளதைப் போன்ற விபரங்களைக் கொண்ட அடையாள ஆவணங்களுக்கு 70 புள்ளிகள் கிடைக்கும்.
- ஆஸ்திரேலிய அரசாங்கம், மாநிலம் அல்லது எல்லைப்-பிரதேசத்தின் வாகன ஓட்டுநர் பத்திரம் அல்லது அனுமதிக்கு 40 புள்ளிகள் கிடைக்கும்.
- எஞ்சியுள்ள புள்ளிகளைப் பெறுவதற்காக மற்ற ஆவணங்களின் கலவை ஒன்று பயன்படுத்தப்படலாம். மேலதிகத் தகவல்களுக்கு Australian Border Force (ABF) (ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படை (ABF))யின் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்: **https://www.abf.gov.au/about-us/what-we-do/border-protection/immigration-detention/visit-detention/identification-guidelines**

தமது பெயர் உள்ள ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு (கடவுச்சீட்டு செல்லுபடியாகாதது என்றால், கடந்த இரண்டு வருடங்களில் அது செல்லுபடியாகக்கூடியதாக இருந்திருக்கவேண்டும்), 'மெடிகெயர்' அட்டை, தள்ளுபடி அட்டை, அல்லது மாணவ-மாணவி அடையாள அட்டை போன்ற ஒரு அடையாள ஆவணத்தை 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய இளையோர்கள் நுழை-வாயிலில் கட்டாயமாகக் காண்பித்தாகவேண்டும்.

16 வயதிற்குக் கீழ்ப்பட்ட இளையோர்கள், வருகையாளர் விண்ணப்பத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு, அவர்களுக்கான பொறுப்பைக் கொண்டுள்ள வயதுவந்த வருகையாளர் ஒருவர் உடன்வரும் பட்சத்தில் பொதுவாக அனுமதிக்கப்படுவார்கள்.

புகைப்படத்துடன் கூடிய உங்களது அடையாள ஆவணத்தில் உங்களுடைய தற்போதைய முகவரி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றால், கூடுதலாக ஒரு அடையாள ஆவணம் கொடுக்கப்பட்டாக வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க கூடுதல் அடையாள ஆவணமானது மத்திய, மாநில, அல்லது உள்ளூர்ப்-பகுதி அரச அதிகாரம், நிதி நிறுவனம் அல்லது வீட்டு வசதி சேவை வழங்குநர் ஒன்றினால் கொடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும், அத்துடன் அதில் உங்களுடைய பெயரும் தற்போதைய முகவரியைப் பற்றிய விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். வீட்டு வாடகைப் பிணைத்தொகை இரசீது, நகரசபைக் கட்டண அறிவிப்பு, வங்கி அறிக்கை அல்லது வீட்டு-வசதிக் கட்டணச் சீட்டு ஆகியன, ஆனால், இவை மட்டுமல்ல, ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள ஆவணங்களுக்கான உதாரணங்களாகும்.

### சட்டத்-துறை சார் மற்றும்/அல்லது புலப்பெயர்வு முகவர்

நீங்கள் ஒரு சட்டத்-துறை சார்ந்த மற்றும்/அல்லது புலப்பெயர்வு முகவரானால், இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, பின்வருவனவற்றையும் நீங்கள் கொடுக்கவேண்டியது கட்டாயமாகும்:

- நீங்கள் ஒரு சட்டதரணி/புலப்பெயர்வு முகவர் என்பதற்கான ஆதாரம்;
- சட்டதரணி, சட்ட-வல்லுநர், சட்ட-உதவியாளர் அல்லது புலப்பெயர்வு முகவர் ஒருவராக நிறுவனம்/வர்த்தகம் ஒன்றினால் நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதைக் காண்பிக்கும் தக்க வர்த்தகத்தின் முத்திரைத் தாளில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான உறுதிப்பாடு;
- அந்த நிறுவனத்திடமிருந்து சட்ட ஆலோசனை நாடிய தடுப்பில் உள்ளவரது/உள்ளவர்களது பெயர்(கள்), அத்துடன் அவர்களது சார்பாகச் செயல்படுவதற்காக பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொருவராலும் கையெழுத்திடப்பட்டு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம்; மற்றும்
- இந்த வருகைக்கான சம்மதத்தினை தடுப்பில் உள்ளவர் அளித்திருக்கிறார் என்பதற்கான ஆதாரம்.

### சுகாதாரத் தொழிலர்

நீங்கள் ஒரு சுகாதாரத் தொழிலர் என்றால் (அதாவது 'தடுப்புக்காவல் சுகாதார சேவை வழங்குந'ரால் அமர்த்தப்படாத ஒருவர் என்றால்), இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, பின்வருவனவற்றையும் நீங்கள் கொடுக்கவேண்டியது கட்டாயமாகும்:

- நீங்கள் ஒரு மருத்துவ அல்லது மருத்துவம் சம்பந்தப்பட்ட சுகாதாரத் தொழிலர் என்பதற்கான ஆதாரம்;
- தக்க வேலையில் இருப்பதற்கான ஆதாரம்; அத்துடன்
- இந்த வருகைக்கான சம்மதத்தினைத் தடுப்பில் இருப்பவர் கொடுத்திருக்கிறார் என்பதற்கான ஆதாரம்.

### அதிகார-பூர்வ வருகையாளர்

நீங்கள் ஒரு 'அதிகார-பூர்வ வருகையாளர்' (official visitor) என்றால், (அதாவது, வெளிப்புற ஆய்வு அமைப்பு, சட்ட அமலாக்க முகமை, அல்லது மாநில எல்லைப்-பிரதேச அரசின் பொதுநல முகமை ஒன்றின் பிரதிநிதியாக நீங்கள் இருந்தால்), இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, கீழ்வருவனவற்றையும் நீங்கள் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்:

- உங்களுடைய வேலையை அல்லது உங்களுடைய பணியமர்த்துநரை உறுதிப்படுத்தும் ஆதாரம்; அத்துடன்
- தடுப்பில் உள்ள நபருடன்/நபர்களுடன் நீங்கள் ஈடுபாடு கொள்ளப்போகிறீர்கள் என்றால், தடுப்பில் உள்ள அந்த நபர்/நபர்கள் அளித்துள்ள சம்மதம்.

### பாராளுமன்ற மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள்

நீங்கள் ஒரு பாராளுமன்ற மற்றும் அரசாங்கப் பிரதிநி என்றால், மற்றும் தடுப்பில் உள்ள நபருடன்/நபர்களுடன் நீங்கள் ஈடுபாடு கொள்ளப்போகிறீர்கள் என்றால், இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, தடுப்பில் உள்ள அந்த நபர்/நபர்கள் உங்களுடைய வருகைக்கான சம்மதத்தினை அளித்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரத்தினை நீங்கள் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்.

### தூதரக அதிகாரி அல்லது வெளி நாட்டு அரசாங்க அதிகாரி

நீங்கள் ஒரு தூதரக அதிகாரியாக அல்லது வெளி-நாட்டு அரசாங்க அதிகாரியாக இருந்தால், இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, தடுப்பில் உள்ள அந்த நபர் இந்த வருகைக்கான சம்மதத்தினை அளித்திருக்கிறார் என்பதற்கான ஆதாரத்தினை நீங்கள் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்.

### சுய-விருப்பத் தொண்டர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் ஆன்மீகப் பராமரிப்பு அளிக்கும் வருகையாளர்கள்

தடுப்பில் இருப்பவர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை நடாத்தும் ஒரு சுய-விருப்புத் தொண்டராக மற்றும்/அல்லது சமூகக் குழு ஒன்றின் அங்கத்தவராக நீங்கள் இருந்தால், இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, 'ஆஸ்திரேலிய ஃபெடரல் காவல்துறை'யினரது சோதனைகளையும், சட்டத்தினால் வேண்டப்படும் மற்ற தக்க சோதனைகளையும் நீங்கள் மேற்கொள்ளவேண்டியது கட்டாயம், மற்றும் (தேவைப்படும் தருணங்களில்) பாதிப்புறும் நிலையிலுள்ள குழந்தைகள்/ஆட்களுடன் பணியாற்றுவதற்கான அனுமதிச் சோதனைகளும் இதில் உள்ளடங்கும்.

### ஒப்பந்ததாரர்கள்

தடுப்புக்காவல் நிலையத்திற்குள்ளாகப் பணியாற்றும் ஒரு ஒப்பந்ததாரராக நீங்கள் இருந்தால், இந்தப் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மேலாக, நீங்கள் கட்டாயமாக:

- நீங்கள் பணியாற்ற அனுமதிக்கப்படும் இடங்களைப் பற்றியும், Facilities and Detainee Service Provider (FDSP) ('தடுப்பு நிலைய சேவை வழங்குநர் (FDSP)) அதிகாரிகளால் நீங்கள் எங்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் என்பதைப் பற்றியும் அறிமுக-அமர்வில் உங்களுக்குக் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் அனைத்திற்கும் இணக்கமாக நடந்துகொள்ளவேண்டும்;

© COMMONWEALTH OF AUSTRALIA, 2022

- மேற்கொள்ளப்படும் பணியினை ஆற்றுவதற்குத் தேவைப்படும் தகுந்த அனுமதிப்-பத்திரங்கள், சான்றுகள் மற்றும் காப்பீட்டு-வசதிகளை வைத்திருக்கவேண்டும்;
- பணிகளைத் துவங்குவதற்கு, அல்லது சேவைகளை வழங்குவதற்கு முன்பாக செய்யப்பட்ட 'ஆஸ்திரேலிய ஃபெடரல் காவல்துறை'யினரது பின்புலச் சோதனை அறிக்கை ஒன்றை வைத்திருக்கவேண்டும்;
- உபகரணக் கருவிகள் தேவைப்படும் தருணங்களில்:
  - மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காகத் தேவைப்படும் கருவிகள் மற்றும் சாதனங்களை மட்டும் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் எடுத்துவாருங்கள், மற்றும் எவ்வொரு கருவியையும் மேற்பார்வை இல்லாத நிலையில் வைக்காதீர்கள்;
  - ஒவ்வொரு கருவியையும் பற்றிய முழு விளக்கத்துடன் அனைத்துக் கருவிகளும் 'கருவிப் பதிவே'ட்டில் பதியப்படுவதையும், நீங்கள் வெளியே செல்லும் பொழுது அவை வெளியே எடுத்துச் செல்லப்படுவதாக FDSP ஊழியர்களால் பதிவேட்டில் குறிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துங்கள்.
  - தலத்தில் விட்டுச் செல்லப்படும் கருவிகள் அல்லது சாதனங்கள் எதுவும் தகுந்த முறையில் FDSP ஊழியர்களுடைய கண்காணிப்பில் பாதுகாப்பாக விட்டுச்செல்லப்படுவதை உறுதிப்படுத்துங்கள்; மற்றும்
  - செய்யும் வேலைக்கு ஏற்ற உடுப்புகளை அணிந்திருங்கள் (ஒளிர்-உடுப்புகள் மற்றும் தொழிலாளர் காலணிகள் போன்றவை).

## அனைத்து வருகையாளர்களுக்கும்

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் வரும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் அனைத்து வருகையாளர்களும் 'வருகையாளர் பதிவேடு' ஒன்றில் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவர்.

உள்-நுழைவிற்கான ஒரு நிபந்தனையாக, அனைத்து வருகையாளர்களும் அவர்களுடைய உடைமைகளும் பாதுகாப்பு சோதனை ஒன்றைக் கடக்கவேண்டும் என்று வேண்டப்படும். கையடக்க 'ஸ்கேனர்'கள், 'வாயில்-நுழைவு சோதனை' 'எக்ஸ்-ரே' மற்றும் போதைவஸ்துக் கண்டுபிடிப்பு முறைகள் ஆகியன இதில் உள்ளடங்கக்கூடும். போதைவஸ்துக் கண்டுபிடிப்பு முறைகளில் மோப்ப நாய்களின் பயன்பாடு உள்ளடங்கலாம். உங்களுடைய உடைமையில் இருக்கும் பொருட்களை ஆய்வு செய்யவேண்டும் மற்றும்/அல்லது 'எக்ஸ்-ரே' சோதனைக்கு அவற்றை உட்படுத்தவேண்டுமென அதிகாரி ஒருவர் உங்களை வேண்டலாம். இந்த வேண்டுகோளிற்கு நீங்கள் இணங்கவேண்டும் என்ற கடப்பாடு உங்களுக்கு இல்லை, இருந்தாலும், நீங்கள் உடன்படாவிட்டால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் செல்வதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படலாம்.

மது அல்லது போதை-மருந்துகளை உட்கொண்ட நிலையில் நீங்கள் இருக்கக்கூடாது.

உள்-நுழைவிற்கான ஒரு நிபந்தனையாக, உடல்-நல சோதனை ஒன்றை மேற்கொள்ளுமாறு அனைத்து வருகையாளர்களும் வேண்டப்படுவர். இந்த உடல்-நல சோதனையானது அதிகார-எல்லைக்குட்பட்ட தகுந்த பொது சுகாதாரப் பிரிவுகள், மற்றும் ஏனைய சுகாதார அதிகாரிகளுடைய அறிவுரைகளின் அடிப்படையில் அமையும், மற்றும் எமது தடுப்புக்காவல் நிலையங்களில் COVID-19-ஐ உள்ளடக்கிய நோய்கள் பரவும் ஆபத்தினைக் குறைப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, உடல்-நல சோதனையைப் பற்றிய வினாத்தொகுப்பு ஒன்று, உடல் உஷ்ண-நிலைச் சோதனை மற்றும் COVID-19 கண்காணிப்பு சோதனை ஆகியன இதில் உள்ளடங்கலாம்.

உடல்-நல சோதனையில் நீங்கள் தேர்ச்சி பெறவில்லையானால், அல்லது உங்களுடைய உடல்-நலத் தகுநிலை குறித்த சந்தேகம் இருந்தால்:

- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைவதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படும்; அத்துடன்
- உங்களுடைய வருகைக்காக இன்னொரு நேரத்தை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும்.

**நடப்பு-நாள் வரைக்குமான தமது COVID-19 தடுப்பூசியேற்றங்களை** வருகையாளர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரத்தினைக் கொடுக்குமாறு அவர்கள் கேட்கப்படலாம்.

கைச் சுகாதாரம், அடக்கமாக இருமும் பழக்கம், மற்றும் உடல்ரீதி விலகல் குறித்து நடைமுறையில் இருக்கக்கூடிய தேவைப்பாடுகள், ஆனால் இவை மட்டுமல்ல, ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதாரம்/நோய்த்தொற்றுக் கட்டுப்பாடு குறித்த நடவடிக்கைகளை நீங்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். முகக் கவசம் ஒன்றை அணியுமாறு நீங்கள் கேட்கப்படலாம். சுகாதாரத்தைப் பற்றிய வேண்டுகோள் எதற்கும் இணங்கத் தவறுவதனால் உங்களுடைய வருகை இடை-முறிக்கப்படலாம்.

உங்களைப் பற்றிய தகவல்களின் திரட்டல் சுயவிருப்பாகும். குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையங்களில் ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள சேவை வழங்குநரது உடல்-நல சோதனைகளைச் செய்யும் அலுவலர்களால் உங்களைப் பற்றிய விபரங்கள் Department of Home Affairs ('உள்-நாட்டு விவகாரத் திணைக்களம்') ('திணைக்களம்').-இன் சார்பாகத் திரட்டப்படும். உங்களைப் பற்றிய விபரங்கள் ஒரு பதிவேட்டில் உள்ளடக்கப்படும், மற்றும் சட்டத்தின் பிரகாரம் அவை பயன்படுத்தப்படலாம், அல்லது வெளிப்படுத்தப்படலாம் ('திணைக்கள'த்திற்கு உள்ளடங்க) (**தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு குறித்த முக்கியமான தகவல்களைப் பாருங்கள்**).

பொது இடம் ஒன்றிற்கு ஏற்றாற்போல நீங்கள் ஆடை அணிந்திருக்கவேண்டியது அவசியம், மற்றவர்களைப் புண்படுத்தக்கூடிய படங்கள் அல்லது வாசகங்கள் உள்ள உடுப்புகளை அணியாமல் வருவது இதில் உள்ளடங்கும். பரிந்துரைக்கப்பட்ட சீருடை அல்லது நிறுவனம் ஒன்றைச் சார்புபடுத்தும் ஆடைகளை அணியாமல் வந்தால், தொழில்சார் அமைப்புகளின் சார்பாக வருகை தருபவர்கள் முறைப்படியான அலுவலக ஊழியர்களைப் போல ஆடை அணிந்திருக்கவேண்டியது அவசியம். பணியிட உடல்-நலம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பாதங்களை மூடும் வகையிலான காலணிகளை (உயர் குதிகால் கொண்ட காலணிகள் கூடாது) அணிந்திருக்கவேண்டியது கட்டாயம்.

வருகை ஒன்றை மறுப்பதற்கு குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ள ஒருவருக்கு இருக்கும் உரிமையை நீங்கள் மதித்தாகவேண்டும்.

## குடிவரவு தடுப்புக்காவல் நிலையத்திற்குள் பொருட்களைக் கொண்டுவருதல்

உங்களுடைய உடைமையில் இருக்கக்கூடாது என்று ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால் தடை செய்யப்பட்டுள்ள பொருட்களை குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் கொண்டுவர நீங்கள் கண்டிப்பாக முயற்சிக்கக் கூடாது. பொது-நல அரசு, மாநில அல்லது எல்லைப்-பிரதேச அரசு ஆகியவற்றின் சட்டம் ஒன்று ஆஸ்திரேலிய சட்டத்தில் உள்ளடங்கும். உங்களிடமிருந்து கண்டெடுக்கப்படும் தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் உங்களுக்குத் திருப்பித் தரப்படமாட்டாது, மற்றும் காவல்துறையினருக்கு அது தெரிவிக்கப்படும்.

கட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் எதையும் நீங்கள் குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் கண்டிப்பாய்க் கொண்டுவரக் கூடாது. கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் என்பவை ஆஸ்திரேலியாவில் நீங்கள் சட்டப்படி வைத்திருக்க இயலுமான பொருட்களாகும், ஆனால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் சுகாதாரம், அந்தரங்கம், பாதுகாப்பு அல்லது நல்லொழுங்கிற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை என்று கருதப்படும் பொருட்களாகும் இவை, ஆகவே இவை அனுமதிக்கப்படாது. குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்கு நீங்கள் வந்துசேரும் பொழுது இந்தப் பொருட்களில் எதையும் நீங்கள் உங்களுடைய உடைமையில் வைத்திருந்தால், வருகையாளர்கள் பகுதிக்கு நீங்கள் செல்வதற்கு முன்பாக, இந்தப் பொருட்களை நீங்கள் பணியாளர்களிடம் அறிவித்துவிட்டு அவற்றை அவர்களது இருப்பில் வைக்கவேண்டும். குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் சுகாதாரம், அந்தரங்கம், பாதுகாப்பு அல்லது நல்லொழுங்கிற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் உங்களுடைய உடைமையில் இருக்கும்பொழுது குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைய உங்களுக்கு அனுமதி அளிக்கப்படாது.

ஒரு பொருள் தடைசெய்யப்பட்டதா அல்லது கட்டுப்படுத்தப்பட்டதா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைவதற்கு **முன்பாக** அந்தப் பொருளை நீங்கள் ஆய்வுகளை மேற்கொள்ளும் அலுவரிடம் அறிவிக்கவேண்டும். நீங்கள் வருகையாளராக உள்ளே இருக்கும் பொழுது உங்களுடைய தனிப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக பூட்டுப்பெட்டிகள் கிடைக்கக்கூடும். குடிவரவுத் தடுப்புக்காவல் நிலைய நுழை-வாயில்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள குறியீடுகளில் தடைசெய்யப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான உதாரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும், மற்றும் **https://www.abf.gov.au/about-us/what-we-do/border-protection/immigration-detention/visit-detention** எனும் ABF-இன் வலைத்தலப் பக்கத்தில் இவை பட்டியலிடப்பட்டிருக்கும்.

தடுப்புக்காவலில் இருக்கும் ஒருவருக்காகக் கொண்டுவரப்படும் பொருட்கள் எதுவும் வருகையாளர்களுக்கான வரவேற்புப் பகுதியில் பாதுகாப்பு சோதனைக்காகக் கொடுக்கப்பட்டாக வேண்டும், மற்றும் மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களை முன்னிட்டு இவற்றை உள்ளே கொண்டுசெல்வதற்கான அனுமதி மறுக்கப்படலாம்.

தடுப்புக்காவலில் உள்ளவர்கள் வைத்திருக்க இயலுமான பொருட்களின் அளவு குறித்த அதிகபட்ச வரம்புகள் உள்ளன. இந்த வரம்பு மீறப்படுகிறது அல்லது மீறப்படும் என்றால் வருகையாளர்களால் கொண்டுவரப்படும் பொருட்கள் மறுக்கப்படலாம்.

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நீங்கள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படும் உங்களுடைய தனிப்பட்ட பொருட்கள் எதற்கும் நீங்களே பொறுப்பு. குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள்ளாக நீங்கள் இருக்கும் பொழுது உங்களுடைய தனிப்பட்ட பொருட்களுக்கு ஏற்படவல்ல இழப்பு அல்லது சேதம் எதற்கும் 'திணைக்களம்' எவ்விதமான பொறுப்பினையும் ஏற்காது. உங்களுடைய தனிப்பட்ட பொருட்களை நீங்கள் உங்களுடன் வைத்திருப்பதையும், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தை விட்டு நீங்கள் வெளியேறும் பொழுது அந்தப் பொருட்களை நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்வதையும் உறுதிப்படுத்தவேண்டியது உங்களுடைய பொறுப்பு.


© COMMONWEALTH OF AUSTRALIA, 2022

## சேவை விலங்குகள்

இங்குள்ள இட-வசதிகளுக்கு வரும் வருகையாளர்கள், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, அவர்களிடம் இருக்கும் ஒரு விலங்கு, சேவை விலங்கு ஒன்று என்பதற்கும், சுகாதாரம் மற்றும் நடத்தைப்பாங்கு ஆகியன குறித்த தக்க தர-நிலைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அந்த விலங்கிற்குப் பயிற்சியளிக்கப்படுள்ளது என்பதற்குமான ஆதாரத்தைக் காண்பிக்குமாறு வேண்டப்படலாம்.

இந்த சேவை விலங்கினை வருகையாளர் அனைத்து நேரங்களிலும் மேற்பார்வையிட்டுவர வேண்டும், மற்றும் குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் வருகையாளர் பகுதியில் வருகைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நேரத்தில் சேவை விலங்கானது தற்காலிகமாக மட்டுமே இருக்கவேண்டும்.

தகுந்த பாதுகாப்புச் சோதனைச் செயல்பாடுகளுக்கு இணங்க, சேவை விலங்கினைப் பாதுகாப்பு சோதனை செய்வதற்கு வருகையாளர்கள் கட்டாயம் சம்மதிக்கவேண்டும். அப்படிப்பட்ட செயல்பாடுகளில் உதவுமாறு வருகையாளர்கள் கேட்கப்படலாம். சேவை விலங்கின் உடுப்புகளை சோதிப்பதும் இதில் உள்ளடங்கலாம்.

## வருகையின் பொழுது ஒருவரது நடத்தை

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலைய விதிமுறைகளையும், பணியாளர்களால் கொடுக்கப்படும் நியாயமான அறிவுறுத்தல்கள் எதையும் நீங்கள் பின்பற்ற வேண்டியது அவசியம். வருகையாளர்களுக்கான பகுதி ஒரு பொது இடம் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். மற்றவர்களை மதிக்கும் விதத்திலும், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் உள்ளவர்களையோ, மற்ற வருகையாளர்களையோ இடையூறு அல்லது தொந்தரவு செய்யாத விதத்திலும் நீங்கள் நடந்துகொள்ளவேண்டும். குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் பாதுகாப்பு, நல்லொழுங்கு ஆகியவற்றினைத் தகாத விதத்தில் பாதிக்கும் வகையில் நீங்கள் நடந்துகொள்ளக்கூடாது, அல்லது அப்படிப்பட்ட நடத்தையினை நீங்கள் ஊக்குவிக்கக்கூடாது.

உங்களுடைய வருகையின் பொழுது அனைத்துப் பணியாளர்களுக்கும் தெரியும் வகையில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'வருகையாளர் அடையாள'(visitor identification)த்தினை அனைத்து வேளைகளிலும் நீங்கள் கண்டிப்பாக அணிந்திருக்கவேண்டும், மற்றும் குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் மற்ற பகுதிகளுக்குச் செல்ல பணியாளர்களால் அனுமதிக்கப்பட்டாலொழிய, வருகைக்கான பகுதிகளில் மட்டுமே நீங்கள் இருக்கவேண்டும் என்பது கட்டாயம்.

குடிவரவு ஒத்தாசை அளிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒரு நபராக நீங்கள் இருந்தாலொழிய, நீங்கள் குடிவரவு சம்பந்தப்பட்ட ஒத்தாசைகளைக் கண்டிப்பாக அளிக்கக்கூடாது. இன்னொரு நபருக்கு யார் குடிவரவு ஒத்தாசைகளை அளிக்கலாம் என்பதைப் பற்றிய கண்டிப்பான கட்டுப்பாடுகளை *Migration Act 1958* (the Migration Act) விதிக்கிறது. புலப்பெயர்வு ஒத்தாசையில் அடங்கும் செயல்கள் யாவை என்பதை Migration Act கோடிட்டுக் காண்பிக்கிறது. குடிவரவு ஒத்தாசையை அளிப்பதற்கான அனுமதி இல்லாத பொழுது அப்படிச் செய்யும் ஒருவர் குற்றம் ஒன்றை இழைப்பவராவார், அத்துடன் $10,000 -இற்கும் அதிகமான அபராதம் ஒன்றிற்கு அவர் ஆளாகலாம்.

உங்களுடன் வரும் இளையோர்கள் எவருக்கும் நீங்களே பொறுப்பாவீர்கள், மற்றும் அனைத்து வேளைகளிலும் அவர்கள் உங்களுடைய மேற்பார்வையில் இருக்கவேண்டும்.

தடுப்புக்காவலில் இருக்கும் ஒருவரைப் பற்றிய, அல்லது மற்ற வருகையாளர்களைப் பற்றிய கரிசனங்கள் எதுவும் உங்களுக்கு இருந்தால், அவற்றைப் பணியாளர்களுக்கு நீங்கள் தெரியப்படுத்தவேண்டும். உங்களுக்கு இருக்கவல்ல எவ்வொரு கரிசனத்தையும் எவ்வாறு தெரிவிக்கவேண்டும் என்பதைப் பற்றிய அறிவிப்புகள் வருகையாளர் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

## உள்-நுழைவு அனுமதி மறுப்பு மற்றும் வருகைகளை நிறுத்துதல்

உடல்-நலம், பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கும் நிலைய இயக்கச் செயல்பாட்டுக் காரணங்களின் விளைவாக (ஆனால், இந்தக் காரணங்கள் மட்டுமல்ல), Immigration Detention Visitor Program ('குடிவரவுத் தடுப்புக்காவல் வருகையாளர்கள் திட்டம்')-இன் கீழான நேரடி வருகையாளர்களது வருகைகள் எவ்வொரு வேளையிலும் தற்காலிகமாக இடை-நிறுத்தப்படலாம்.

பின் வரும் தருணங்களில், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைவதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படலாம், அல்லது உங்களுடைய வருகை முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்:

- உங்களுடைய உடைமையில் இருக்கும் அனைத்துப் பொருட்களையும் அறிவிக்க நீங்கள் தவறினால்;
- குறிப்பிட்ட சில கடந்தகால குற்றத் தண்டனைகளை அறிவிக்க நீங்கள் தவறினால்;
- உங்களுடைய வருகையைப் பற்றிய போதுமான முன்னறிவிப்பை அளிக்க, வருகைக்கான அங்கீகாரத்தைப் பெற நீங்கள் தவறினால், அல்லது உள்-நுழைவிற்கான சட்டப்படியான அதிகாரம் உங்களுக்கு இல்லை என்றால்;
- போதுமான அடையாள ஆவணங்களைக் கொடுக்க நீங்கள் தவறினால்;
- குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குள் இருக்க நீங்கள் தவறினால்;
- உங்களுடைய பொறுப்பில் இருக்கும் இளையோர்களை அனைத்து வேளைகளிலும் மேற்பார்வை செய்ய, அல்லது அவர்களுடன் இருக்க நீங்கள் தவறினால்;
- தகுந்த உடுப்புகள் அல்லது பாதங்களை மூடும் வகையிலான காலணிகளை அணிய நீங்கள் தவறினால்;
- இந்த 'உள்-நுழைவு நிபந்தனைக'ளை ஏற்றுக்கொள்ள, அல்லது இவற்றில் கையொப்பமிட நீங்கள் மறுத்தால்;
- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலைய அடையாள ஆவணம் ஒன்றை (குறிப்பாக சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு) உடன் எடுத்துச்செல்ல நீங்கள் மறுத்தால்;
- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் அனுமதிக்கப்படாத பொருளை/பொருட்களை கையளிக்க நீங்கள் மறுத்தால்;
- பாதுகாப்பு மற்றும்/அல்லது உடல்-நல சோதனைச் செயல்பாட்டு முறைகள் அல்லது ஆய்வுச் செயல்பாட்டு முறைகளின் ஊடாகச் செல்ல நீங்கள் மறுத்தால்;
- உங்களுடைய நடத்தையானது குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின், அல்லது குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் உள்ளவர்களுடைய பாதுகாப்பு அல்லது நல்லொழுங்கிற்குத் தகாததாக, அவற்றைப் புண்படுத்தக்கூடியதாக அல்லது அச்சுறுத்தக்கூடியதாக இருந்தால்;
- மது அல்லது சட்டப்புறம்பான போதைமருந்துகளை உட்கொண்ட நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று அலுவலர் ஒருவர் சந்தேகித்தால்;
- உங்களுக்கு உடல்-நலம் சரியில்லை என்று அலுவலர் ஒருவர் சந்தேகித்தால்;
- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தில் அனுமதிக்கப்படாத பொருள்/பொருட்களை நீங்கள் எடுத்துச் செல்கிறீர்கள் என்று அலுவலர் ஒருவர் சந்தேகித்தால்;
- 'உள்-நுழைவு நிபந்தனைக'ளுக்கு இணக்கமான முறையில் நீங்கள் நடந்துகொள்ளத் தவறினீர்கள் என்று அலுவலர் ஒருவர் சந்தேகித்தால்;
- பாதுகாப்பு, ஒழுங்குமுறைகள், அல்லது குடிவரவுத் தடுப்புக்காவல் மையத்தில் ஒழுக்கச் சீர்குலைவு அல்லது குற்றச்செயல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழுந்தால்;
- வேவுத்-தகவல்கள் அல்லது அபாய-நிலை குறித்த பிரச்சினைகள் இருந்தால், மற்றும்/அல்லது
- மற்ற இயக்கச்-செயல்பாட்டுக் காரணங்கள் இருந்தால்.

உங்களுடைய வருகையை இடை-நிறுத்துவதற்கான, அல்லது உங்களையோ, பொருட்கள் எதையுமோ குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் அனுமதிக்காததற்கான முடிவு எதனையும் நீங்கள் கண்டிப்பாக மதித்தாக வேண்டும். கேட்கப்பட்டால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தினை விட்டு நீங்கள் உடனடியாக வெளியேறியாக வேண்டும். அப்படிச் செய்ய மறுப்பது எதிர்காலத்தில் வருகை தருவதற்கான உங்களுடைய இயலுமையைப் பாதிக்கக்கூடும், அத்துடன் அது காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்படக் கூடும்.

## முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டல்கள்

உங்களுடைய வருகையைப் பற்றிய முறைப்பாடு அல்லது பின்னூட்டல் எதனையும் நீங்கள் ஏற்படுத்தலாம். மேலதிகத் தகவல்களை **https://www.homeaffairs.gov.au/help-and-support/departmental-forms/online-forms/complaints-compliments-and-suggestions** எனும் 'திணைக்கள'த்தின் வலைத்தலப் பக்கத்தில் காணலாம்.

## தகவல் பாதுகாப்பினைப் பற்றிய முக்கியமான தகவல்கள்

*Privacy Act 1988* -ஐ உள்ளடக்கிய சட்டங்களால் உங்களைப் பற்றிய தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன. உணர்வார்ந்த தகவல்கள் உள்ளடங்க, உங்களைப் பற்றிய தகவல்களின் திரட்டல், பயன்பாடு மற்றும் அவற்றின் வெளிப்பாடு ஆகியவற்றைப் பற்றிய முக்கியமான தகவல்கள் ABF -இன் வலைத்தலத்தில், அல்லது தடுப்புக்காவல் நிலையங்களில் கிடைக்கும் படிவம்1553 *'Privacy Notice Visitors to immigration detention facilities' (தகவல் பாதுகாப்பு அறிவிப்பு குடிவரவுத் தடுப்புக் காவல் நிலையங்க'ளுக்கு வரும் வருகையாளர்கள்)*-இல் காணப்படலாம். இந்தப் படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்பாக படிவம் 1553-ஐ நீங்கள் வாசித்து விளங்கிக்கொண்டீர்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள்

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தைப் பற்றிய விபரங்கள், தொடர்பு விபரங்கள், மற்றும் திறப்பு நேரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய மேலதிகத் தகவல்களை **https://www.abf.gov.au/about-us/what-we-do/border-protection/immigration-detention/visit-detention** எனும் ABF -இன் வலைத்தலப் பக்கத்திலிருந்து பெறலாம்.

© COMMONWEALTH OF AUSTRALIA, 2022

# *Agreement*

**All visitors must read the *Conditions of Entry* on pages 1–3 of this form and sign this Agreement before entering the immigration detention facility.**

I declare that:

- I have read the *Conditions of Entry* on pages 1–3 of this form.
- I am not bringing any prohibited or controlled items into this immigration detention facility.

I understand that:

- failure to comply with the above conditions may result in:
  - refusal of entry to the immigration detention facility;
  - termination of the visit;
  - removal from the immigration detention facility; and

  that any such failure may negatively impact the approval of any application I may make for future visits to this or any other immigration detention facility.
- by signing this Agreement, I agree to comply with the *Conditions of Entry* on pages 1–3 of this form.

I acknowledge that:

- the Department collects personal information from me and that I have read the information contained in form 1553 *Privacy Notice Visitors to immigration detention facilities*. I consent to the collection, use and disclosure by the Department of my personal information, and the personal information of any accompanying minors of which I am the parent or guardian, for those purposes set out above and/or as described in form 1553 or as otherwise authorised or required by an Australian law.

# ஒப்பந்தம்

**அனைத்து வருகையாளர்களும் இந்தப் படிவத்தின் 1 முதல் 3 வரையுள்ள பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள *‘உள்-நுழைவு நிபந்தனைகள்’ (Conditions of Entry)*-ஐ வாசித்து, குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைவதற்கு முன்பாக இந்த ‘ஒப்பந்த’த்தில் கையெழுத்து இட்டாக வேண்டும்.**

பின் வரும் அறிவிப்பினை நான் செய்கிறேன்:

- இந்தப் படிவத்தின் 1 முதல் 3 வரையுள்ள பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள *‘உள்-நுழைவு நிபந்தனைகள்’ (Conditions of Entry)*-ஐ நான் வாசித்துவிட்டேன்.
- தடை செய்யப்பட்டுள்ள, அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் எதையும் நான் இந்த குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் கொண்டுவரவில்லை.

பின் வருவன என் புரிதலாகும்:

- மேலே சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணக்கமாக நடந்துகொள்ளத் தவறுவது பின் வரும் விளைவுகளில் முடியக்கூடும்:
  - குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்குள் நுழைவதற்கான அனுமதி மறுக்கப்படல்;
  - வருகை நிறுத்தப்படல்;
  - குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தப்படல்; அத்துடன்

  இந்த மற்றும் வேறு எவ்வொரு குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்திற்கும் செல்வதற்காக நான் இடக்கூடிய எவ்வொரு எதிர்கால விண்ணப்பத்தின் மீதும் அப்படிப்பட்ட எவ்வொரு தவறுதலும் எதிர்முகமானதொரு தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பது.
- இந்த ‘ஒப்பந்த’த்தில் கையெழுத்து இடுவதன் மூலம், இந்தப் படிவத்தின் 1 முதல் 3 வரையுள்ள பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள *‘உள்-நுழைவு நிபந்தனைகள்’ (Conditions of Entry)*-இற்கு இணக்கமாக இருக்க நான் சம்மதிக்கிறேன்.

நான் ஏற்றுக்கொள்வதாவது:

- தனிப்பட்ட தகவல்களை ‘திணைக்களம்’ என்னிடமிருந்து திரட்டும், மற்றும் படிவம் 1553 *‘Privacy Notice Visitors to immigration detention facilities’* -இல் அடங்கியுள்ள தகவல்களை நான் வாசித்துள்ளேன் என்பதை நான் ஏற்கிறேன். மேலே சொல்லப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, மற்றும்/அல்லது படிவம் 1553-இல் சொல்லப்பட்டுள்ளவாறு, அல்லது மற்றபடி ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு, அல்லது வேண்டப்பட்டவாறு என்னைப் பற்றிய மற்றும் என்னுடன் வரும் இளம்வயதான என் பிள்ளை அல்லது என் பாதுகாவலில் இருக்கும் பிள்ளையைப் பற்றிய தகவல்களைத் ‘திணைக்களம்’ சேகரிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் மற்றும் வெளிப்படுத்துவதற்குமான என்னுடைய சம்மதத்தினை நான் அளிக்கிறேன்.

Your full name
உங்களுடைய முழுப் பெயர்

**Your signature**
**உங்களுடைய கையொப்பம்**

Date
திகதி

Day நாள் / Month மாதம் / Year ஆண்டு



© COMMONWEALTH OF AUSTRALIA, 2022